Deposition of witness
(Chapter XXIII code of Criminal Procedure)
In the court of Judicial Magistrate No.I, Tindivanam.

**CASE NO.CC. 258/2020 PW-5**

Name : ராம.ஆண்டவர்
Father / Husband name : ராமர்
Village : தேனி
Age : 63
Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 this day 11.03.2026

A1, A2 present. Both side counsel present.

<u>**முதல் விசாரணை**</u>

1. நான் தற்போது தமிழ்நாடு காவல்துறையில் ஆய்வாளராக பணிபுரிந்து ஓய்வுபெற்று இருந்துவருகிறேன். இந்த வழக்கில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த உதவி ஆய்வாளர் ரவிச்சந்திரன் அவர்களின் கையொப்பமும், கையெழுத்தும் எனக்கு நன்கு பரிச்சயம். கடந்த 28.05.2019 ம் தேதி ரோசணை காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணியிலிருந்தபோது வெள்ளிமேடுபேட்டை காவல் நிலைய த.கா.190 என்பவர் நிலைய பொறுப்பிலிருந்தபோது அதே காவல் நிலைய த.கா.1686 கோவிந்தராஜ் எழுத்து மூலமாக கொடுத்த புகாரை பெற்று ரோசணை காவல் நிலைய சிஎஸ்ஆர் 235/2019 ஐ பதிவு செய்து வைத்திருந்ததை உதவி ஆய்வாளர் ரவிச்சந்திரன் பார்வையிட்டு நிலைய குற்ற எண் 172/2019, U/s 294(b),353,506(i) IPC ன் படி வழக்கு பதிவு செய்துள்ளார். **அந்த முதல் தகவல் அறிக்கை அசாஆ 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

2. பின்னர் வழக்கினை மேல்விசாரணைக்காக எனது பார்வைக்கு வைத்ததை நான் 28.05.2019 அன்று விசாரணைக்கு எடுத்துக்கொண்டு காலை 11.00 மணிக்கு சம்பவம் இடம் சென்று சாட்சிகள் புரட்சிக்கண்ணன் மற்றும் தினேஷ் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம்

மற்றும் பார்வை மகசர் தயார்செய்தேன். பார்வை மகசரில் சாட்சிகளிடம் கையொப்பம் பெற்று அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். **அந்த பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் அசாஆ 4 மற்றும் 5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் வழக்கின் சம்பவ சாட்சிகளான கோவிந்தராஜ், சண்முகம், கவின், அஞ்சலை, அருள்ராஜ் ஆகியோர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். சாட்சிகளின் விசாரணையிலிருந்து சம்பவம் உண்மை என தெரியவர எதிரிகளை தேட எதிரிகள் தலைமறைவாகி இருந்துள்ளார்கள்.

3. பின்னர் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த உதவி ஆய்வாளர் ரவிச்சந்திரன் அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் தலைமறைவு எதிரிகளை தேடிவந்த நிலையில் அவர்கள் விழுப்புரம் மாண்புமிகு முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் முன்பிணை பெற்று சென்றுள்ள நிலையில் வழக்கின் அனைத்து புலன் விசாரணை முடித்து எதிரிகள் மீது U/S 294(b),353,506(i) IPC ன் படி குற்ற இறுதி அறிக்கை தயார் செய்து தாக்கல் செய்தேன்.

<u>**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**</u>

1. புகாரில் எதிரிகள் மற்றும் 3 நபர்கள் பிரச்சனை செய்தார்கள் என்று சொல்லியுள்ளார்கள் என்றால் சரிதான், எனது விசாரணையில் அந்த 3 நபர்கள் பிரச்சனை செய்யவில்லை என்று சொல்லியுள்ளார். மேற்படி 3 நபர்களின் பெயர், விவரங்களை இறுதி அறிக்கையில் சொல்லவில்லை என்றால் சரிதான். அ.சா.1 அன்றையதினம் மருத்துவமனையில் புறக்காவல் பணி ஒதுக்கப்பட்டிருந்தது என்றால் சரிதான். எதிரிகள் மறித்ததாக சொல்லும் தனியார் ஆம்புலன்ஸ் குறித்து விசாரித்து அதன் ஆவணங்களை இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. மேற்படி வாகனம் ஆம்புலன்ஸ் என்பதற்கு ஆவணம் என்னிடம் கொடுக்கவில்லை என்றால் சரிதான். அன்றையதினம்

மருத்துவமனையில் பணியிலிருந்த மருத்துவர்கள் மற்றும் மருத்துவ ஊழியர்களை சாட்சியாக விசாரித்தேனா என்றால் இல்லை, மருத்துவர்கள் உள்ளே இருந்ததால் சம்பவம் குறித்து தெரியவில்லை.

2. அ.சா.1 சம்பவத்தை அவரின் செல்போனில் பதிவு செய்தாக சொல்லியுள்ளார், அதனை இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான், அதனை எதிரிகள் பதிவு செய்யவிடவில்லை. எதிரிகள் பதிவு செய்யவிடவில்லை என்று அ.சா.1 ன் வாக்குமூலத்தில் உள்ளதா என்றால் இல்லை. எதிரிகள் அந்த செல்போனை தட்டிவிட்டதாக அ.சா.1 ன் வாக்குமூலம் மற்றும் புகாரில் உள்ளதா என்றால் இல்லை, முதல் தகவல் அறிக்கையில் உள்ளது. மேற்படி செல்போனை தட்டிவிட்டதாக முதல் தகவல் அறிக்கையில் உள்ளதா என்றால் இல்லை. 11.05.2019 அன்று நடந்த சம்பவத்திற்கு 28.05.2019 அன்று காலை 10.00 மணியளவில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த காலதாமதத்திற்கான காரணத்தை குறிப்பிட்டு இறுதி அறிக்கையில் சொல்லவில்லை என்றால் சரிதான், மனுரசீது வழங்கப்பட்டுள்ளது. அந்த மனுரசீதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். சாட்சி கவினின் சொந்த ஊர் வியாசர்பாடி என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அவர் திண்டிவனம் அரசு மருத்துவமனைக்கு எப்படி வந்தார் என்று சொல்லவில்லை என்றால் சரியல்ல, அடிப்பட்ட நபர் அவரின் உறவினர் என்று சொன்னார்.

3. அ.சா.1 பூத்திலிருந்தபோது யாரோ ஒருநபர் தகவல் சொன்னதாக சொல்லப்பட்டுள்ளது, அவர்களின் பெயர் அஞ்சலை, சண்முகம் என்று அ.சா.1 எனது விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான். எதிரி நாகராஜ் சம்பவத்தின்போது குடிபோதையில் இருந்தார் என்றும் அ.சா.1 எனது விசாரணையில் சொல்லியுள்ளாரா என்றால் இல்லை. அ.சா.1 ஆம்புலன்ஸ் இல்லாத வாகனத்தை மருத்துவமனையில் வைத்து சவாரி கேட்டதால்,

மருத்துவமனையில் இருந்தவர்கள் அதில் வரமறுத்ததால் எதிரிகள் மீது பொய்யான புகார் கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. நான் முறையாக விசாரித்திருந்தால் அன்றையதினம் வந்த வாகனம் ஆம்புலன்ஸ் இல்லை என்பது தெரியவந்திருக்கும் என்றால் சரியல்ல. எதிரிகள் எந்த பிரச்சனையும் செய்யவில்லை, யாரையும் தடுக்கவும் இல்லை என்றால் சரியல்ல. எதிரிகள் மீது இதற்கு முன்பு காவல் நிலையத்தில் புகார் வந்தது இல்லை என்றால் சரிதான். எதிரிகள் மீது வேறு குற்ற வழக்குகள் உள்ளதா என்றால் தெரியாது. உயர்அதிகாரிகள் அழுத்தத்தினால் பொய்யான புகாரின் மீது பின்னிட்டு வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் சரியல்ல.

/ திறந்த நீதி மன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால்
தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அதை தட்டச்சரால் தட்டச்சு
செய்யப்பட்டு பின்பு அவருக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு
அவர் சரி என்று ஒப்புக்கொண்டவுடன் என்
முன்பாக கையொப்பமிட்டார்//

நீதித்துறை நடுவர் எண். 1 , திண்டிவனம்.